# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | மாதையன் | நாள் | 01.02.2024 |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | | |

## 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை:–

1) இவ்வழக்கில் 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளை இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில்தான் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம் என்றால், சரிதான். வாதிகளுக்கும் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும் இடையேயான தனிப்பட்ட சொத்துபிரச்சனையின் காரணமாகத்தான் இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான்.

2) பொதுவாக ஒரு சொத்து சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அது நிலுவையிலிருந்தால் அவ்வாறு வழக்கு நிலுவையிலுள்ள சங்கதி குறித்து அரசு அலுவலர்களுக்கு மேற்படி தரப்பினர்களில் யாரேனும் தெரியப்படுத்தினால் தான் அரசு அலுவலர்களுக்கு வழக்கு நிலுவையிலுள்ளது குறித்து தெரியவரும் என்றால், சரிதான்.

3) இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறித்து வருவாய் துறையினருக்கு யாரேனும் அறிவிப்பு அளித்துள்ளோமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. பொதுவாக அரசு அலுவலர்கள் ஆவணங்களின் அடிப்படையில் சட்டப்படிதான் செயல்படுவார்கள் என்றாலும், தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் செயல்படமாட்டார்கள் என்றாலும், சரியல்ல.

4) 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரியுள்ளோம் என்றால், 1 முதல் 5 பிரதிவாதிகளின் பெயரில் தவறாக வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய கோரி 7 ம் பிரதிவாதியிடம் மனு அளித்தும் அவர் நடவடிக்கை எடுக்காததால், மேற்படி பட்டாவை ரத்து செய்யகோரி மனு அளித்துள்ளோம். மேற்படி மனுவை 7 ம்

பிரதிவாதியிடம் எவ்வாறு அளித்தோம் என்றால், எழுத்துமூலமாக அளித்தோம். அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு எவ்வித ஆவணங்களையும் இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.